# “கா. அரங்கசாமியின் வானிலா நாடக அமைப்பும் நிகழ்வும்”

- முனைவர். எண்ணம்மங்கலம் அ. பழனிச்சாமி
பார்வதி நகர், குள்ளம்பாளையம் பிரிவு,
கோபி.

ஒவ்வொரு படைப்பாளியின் படைப்பும் ஏதாவதொரு குறிக்கோளுடனேயே அமைகின்றது. நேற்றைய வரலாறாயினும் இன்றைய வாழ்க்கையானினும் அவற்றிலுள்ள எத்தனையே நிகழ்வுகளைப் படைப்பாளன் காண்கின்றான். அவற்றைப் பற்றிச் சிந்திக்கின்றான். சிலவற்றால் அவன் மனம் களிப்படைகின்றது. சிலவற்றால் அவன் மனம் துன்புறுகின்றது. சில நிகழ்வுகள் அவனைக் கொதித்தெழச் செய்கிறது. சில அவனை வழிநடத்துகின்றன. இப்படி படைப்பாளன் எத்தனையோ வகைகளில் நேற்றைய, இன்றைய வாழ்க்கை முறைகளால் பாதிக்கப்படுகின்ற பொழுது அப்பாதிப்பைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றான். அப்பகிர்ந்து கொள்ளலே அவனின் படைப்பாக அமைகிறது. இப்படிப் படைப்பாளனின் உள்ளத்தில் பாதிப்பு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கும் கருத்துக்களுக்கும் வடிவம் கொடுக்க எந்தவகை இலக்கியத்தையும் தேர்ந்தெடுக்கலாம். அது கவிதையாகவோ, காப்பியமாகவோ, சிறுகதையாகவோ, புதினமாகவோ, நாடகமாகவோ இருக்கலாம். இவ்வகையில் படைப்பாளர் கா. அரங்கசாமி தன் உள்ளத்துப் பாதிப்பை “வானிலா” என்னும் கவிதை நாடக அமைப்பில் வெளிப்படுத்தியுள்ளார். இந்நாடகத்தின் அமைப்பையும் நிகழ்வுகளையும் காணலாம்.

**வானிலா நாடகத்தின் அமைப்பு:**

நாடகம் பொதுவாக அங்கம், களம் அல்லது காட்சி என்ற பிரிவுகளைக் கொண்ட அமைப்பில் சிறப்புறுகிறது. பின்னர் அதற்கேற்ற மேடையமைப்பும், பாத்திரங்களும் கொண்டு அமைகின்ற பொழுது நாடகம் மேலும் அழகு பெறுகின்றது. அவ்வகையில் வானிலா நாடகம் ஐந்து களங்களையும், முதல் நான்கு களங்கள் ஐந்தைந்து காட்சிகளையும், ஐந்தாவது களம் ஆறு காட்சிகளையும் கொண்டு திகழ்கின்றன. பொதுவாக நாடகங்களை ஐந்து நிலைகளாகப் பிரிக்கின்றனர். அவை தொடக்கம், வளர்ச்சி, உச்சநிலை, வீழ்ச்சி முடிவு என்பன. இந்த அம்சங்களைக் கொண்டிருப்பதால் உலகம் முழுதும் நாடகங்களை ஐந்து நிலைகளாகப் பிரித்தனர் என்பர் ஹட்சன்.

www.tamilarangam.in

**தொடக்கம்:**

நாடகத்தின் முற்களத்தின் முதல் காட்சியை தொடக்கம் எனலாம். ஒவ்வொரு நாடகமும் எதாவதொரு முரண்பாட்டைச் சிக்கலைக் கொண்டிருக்கும். அந்த முரண் தனி மனிதர்களுக்கிடையிலோ, தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையிலோ, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலோ அமைந்திருக்கும். இது நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஏற்படும் முரண் ஆகும். பொதுவாக நன்மையின் உருவாக ஒருவரும், தீமையின் உருவாக ஒருவரும் படைக்கப்பட்டு இவர்களுக்கிடையில் எழும் பிரச்சினையை முரணாகக் காட்டுவது நாடக இயல்பு என்று கூறலாம்.

இந்த முரண்பாட்டினை முதற்காட்சியல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். கதையில் இந்த முரண்பாட்டைக் கொண்ட முக்கிய பாத்திரங்களை முதற்காட்சியில் அறிமுகப்படுத்துவது சிறந்தத் தொடக்கமாகக் கருதப்படுகிறது.

வானிலா நாடகத்தின் முதற்காட்சி சித்திரைத் திருவிழாவில் நடைபெறும் பட்டிமன்றத்துடன் தொடங்குகிறது. உயிர்களுக்கு இன்ப நிறைவைத் தருவது காதலே, பொருளே, சமயமே என்ற தலைப்பிலமைந்த அப்பட்டிமன்றத்தில் சோழ நாட்டுப் புலவன் வளநம்பி ‘காதல்’ என்ற அணியிலும், சேரநாட்டுப் புலவன் முதுகம்பன் ’சமயமே’ என்ற அணியிலும் வாதாடுகின்றனர். முடிவில் குழப்பம் ஏற்படவே முதுகம்பன் எனும் புலவன் வெளியேறிச் சென்று சோழ நாட்டுப்புலவன், பாண்டிய நாட்டுப்புலவன் மீது வெறுப்பு கொண்டு வளம்நம்பியின் வாய்ப்பறையையும், திருவேந்தனின் கொட்டத்தையும் அடக்குதல் தன் கடன் என்றும், அவர்களை அழிக்க வேண்டும் என்றும் கூறிக்கொண்டு தன் இல்லத்தில் இருக்கும் சூழலில் சேர நாட்டான் கொடுத்த ஓலையைப் பெற்றுக் கொண்டு இராமன், சந்திரன், மலையரசி, பூசுந்தரி ஆகியோர் வருகின்றனர். வந்ததும் அவர்கள் வந்ததம் ஓலையை வாங்கிப் படித்த முதுகம்பன் இவர்கள் சேரநாட்டவனின் சதி ஆட்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சி கொண்டு அவர்களிடம் ‘சோழ நாட்டையும், பாண்டிய நாட்டையும் அழிக்க வேண்டும். அதற்கான திட்டத்தை வகுப்போம்” என்று கூறுகிறான். இதுவே நாடகத்தின் தொடக்க நிலையாக அமைகிறது. இவ்வாறு தொடக்கமே முரண்பாட்டுடன் அமைந்து நாடகம் வளர்வதற்கு அதுவே அடிப்படையாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

www.tamilarangam.in

**வளர்ச்சி:**

முதற்காட்சியில் அறிமுகப்படுத்தப்படும் முரணும், முரண்பாட்டைக் கொண்ட பாத்திரங்களின் இயல்புகளும் படிப்படியாக வளர்வதைக் காரண காவியத் தொடர்புள்ள நிகழ்ச்சிகளின் மூலமும், உரையாடல்களின் மூலமும் விளக்குவது வளர்ச்சி ஆகும். முதுகம்பனின் உள்ளத்திலும் சேர மன்னன், சுந்திரபாண்டியன் ஆகியோர் உள்ளங்களிலும் தோன்றும் முரண்பாடும் நாடக வளர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. முதுகம்பனும், சேரனின் சதியாட்களும் இணைந்து தீட்டும் சதித்திட்டங்களால் நாடகம் வளர்கிறது. முதுகம்பன் சோழ, பாண்டிய நாட்டை அழிக்க சேரனின் சதியாட்களுடன் சேர்ந்த பல வகையிலும் சதித் திட்டம் தீட்டுகின்றான். சோழ, பாண்டியர்களுக்கிடையே பகைமை ஏற்பட இருவரும் இருக்கும் சபையில் பூசுந்தரியைப் பாண்டியனை மட்டும் புகழ்ந்து பாடி ஆடச் செய்து இருவருக்கும் மன வேறுபாடு ஏற்படுத்த முயல, வீர பாண்டியன் - வானிலா ஆகியோரின் திருமணத்தை நடைபெறாது தடுப்பதன் வழி சோழ, பாண்டியரின் உறவைக் கட்டுப்படுத்தல், வீர பாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய இருவரையும் கொல்லச் சதி செய்தல் முதலான சதிகளால் நாடகமாக வளர்கின்றது.

**உச்சநிலை:**

நாடகத்தின் சிக்கல்கள் படிப்படியாக வளர்ந்து உச்சத்தை அடைந்து சிக்கல்களுக்கு ஒரு முடிவு வருகின்ற நம்பிக்கையை ஒரு நிகழ்ச்சி ஏற்படுத்துமாயின் அதுவே உச்சநிலை ஆகும்.

முதுகம்பன் திட்டப்படி குலசேகரன் கொலை செய்யப்படுகிறான் இச்செய்திளை அறிந்த வீரபாண்டியன், மிகுந்த சினம் கொண்டு போருக்குச் சென்று சேரனையும், சுந்தரபாண்டியனையும் அழிக்க வேண்டும் என்று கூறி உறவினனாகிய சோழன் உதவியுடன் போருக்குச்செல்கிறான். இந்நிலையில் அந்நியனான மாலிக்கபூர் உதவியை முதுகம்பன் நாடி, சூழ்ச்சியால் வீரபாண்டியனை வெல்ல நினைக்கிறான். முதுகம்பன் மாலிக்கபூரைச் சந்தித்தல், மாலிக்கபூர் - வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் ஆகிய இருவரையும் கொன்று தானே நாட்டைக் கொள்ளையடித்து செல்ல திட்டம் தீட்டியுள்ளான் ஆகியவை இந்நாடகத்தின் உச்சநிலை ஆகும்.

www.tamilarangam.in

**வீழ்ச்சி** :

உச்சநிலையைக் கடந்ததும் நாடகம் முடிவை நோக்கிச் செல்லும். அம் முடிவு இன்பமாகவோ, துன்பமாகவோ இருக்கலாம். வீரபாண்டியன் சோழ மன்னன் உதவியுடன் போருக்குச் செல்ல அவனைச் சேரனும், சுந்தரபாண்டியனும் மாலிக்கபூர் உதவியுடன் எதிர்க்கின்றார். இறுதியில் வீரபாண்டியன் மடிந்த செய்தியை முத்துக்கூத்தனார் மூலம் அறிந்த வானிலா போர்க்களம் சென்று வீரப்போர் புரிந்து மடிகிறாள். வீரபாண்டியனும் அவன் மனைவி வானிலாவும் இறந்த நிகழச்சி நாடகத்தின் வீழ்ச்சியாக தெளிவுப்படுத்திக் காட்டுகிறார்.

**முடிவு:**

அக்காலத்தில் சமுதாய நிலை வெளிப்படும் போக்கிலும், ஆசிரியரின் நோக்கத்தையும் உணர்த்தும் வகையில் முடிவு அமைந்திருக்கும்.

சுந்திரபாண்டியன் மாலிக்பூர் உதவியுடன் சோழனையும், பாண்டியனையும் வெற்றி கொண்டாலும் இறுதியில் அந்நியன் மாலிக்கபூர் சுந்திரபாண்டியனைக் கொன்று பாண்டிய நாட்டைக் கைப்பற்றுகிறான். இதுவே இந்நாடகத்தின் முடிவாக அமைந்துள்ளது. இந்தநிலை உருவாகக் காரணம் உடன்பிறந்தாரிடம் பங்காளிக் காய்ச்சல், பகை வெறி, ஒற்றுமையின்மை, இனத்தையும் மொழியையும் காக்க வேண்டும் என்ற உணர்வின்மை தமக்குரிய பண்பாட்டைப் பேண வேண்டும் என்ற தன்மையின்மை ஆகியவையே என்ற கருத்து நாடகம் படிப்போர் மனத்தில் ஏற்படும் வகையில் முடிவு அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

**“வானிலா” நாடகக் கரு:**

இன உணர்வும், மொழியுணர்வும், இன்றிப் பங்காளிக் காய்ச்சலாலும், ஆதிக்கப் போட்டியாலும் தம்மைச் சார்ந்தவர்களை அழித்துத் தரும் அழிவுக்கு உட்படுகின்ற தமிழினத்தின் இழிநிலைமை மனத்தைப் பாதிக்க அப்பாதிப்பை நாடகமாக்கியுள்ளார் பேராசிரியர் கா. அரங்கசாமி. பாண்டிய நாடு தனக்கென ஒரு தனி வரலாற்றினையும், பண்பாட்டினையும் கொண்டது. இருப்பினும் இதனை ஆட்சி செய்தவர்களிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாததால் எத்தகைய சீரழிவினைப் பாண்டியநாடு சந்தித்தது என்பதை சுந்தர பாண்டியன் - வீரபாண்டியன் வரலாறு விளக்குகிறது. சுந்தர பாண்டியனிடத்தில் உள்ள பொறாமைத் தீ அவனையும் அவனைச்

www.tamilarangam.in

சார்ந்தவர்களையும் சுட்டுப் பொசுக்குகிறது. சுந்தர பாண்டியன் தன்னைப் பெற்ற தந்தையையே கொல்லச் செய்கிறான். தன் தம்பியின் இறப்பிற்கும் காரணமாக அமைகின்றான். நாட்டை ஆளும் மன்னர் பரம்பரையில் வந்த அவனே நாட்டுப்பற்றும் இனப்பற்றும் இன்றி வேற்றான் நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கிறான். ஆயிரம் வேற்றுமைகள் இருப்பினும் அந்நியர் வந்து புகுவதில் ஏற்படும் சீர்கேடுகளைச் சிந்தித்துப் பார்க்காததால் பாண்டிய நாடே பாதிக்கப்படுகிறது. சுந்தர பாண்டியனின் மனப்போக்கிற்குச் சேரமன்னனும் துணை போகின்றனர். சுந்தரபாண்டியன், சேரன் போன்ற மன்னர்களுக்கே இனவுணர்வு இல்லையெனில் நாட்டு மக்கள் எப்படி இருப்பர் என்று சிந்திக்கும் வகையில் முதுகம்பன் செயல்கள் அமைகின்றன. பிரிவினை மனப்பான்மையும், பகைமையும் கொண்டுள்ள மன்னர்களை இணைக்கும் பாலங்களாகவே சங்கப்புலவர்கள் செயல்பட்டுள்ளனர். முப்பெரும் வேந்தர்களும் ஒன்றுபட்டு வாழ்வதையே அவர்கள் யாவரும் விரும்பியுள்ளனர். புலவனாகிய முதுகம்பன் மொழியுணர்வின்றி, இன உணர்வுமின்றி அந்நிய மொழி பேசும் மாலிக்கபூரிடமே பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வரத் தூது போகின்றான். பாண்டிய நாட்டை கொள்ளையடிக்க வழியும் வகுத்துத் தருகின்றான். இவ்வாறு வேலியே பயிரை மேயும் வகையில் தமிழ் மக்கள் செயல்பட்டதால் தான் தனக்கொரு பழமையும் பாரம்பரியமும் கொண்டு விளங்கிய தமிழினம் எத்தனையோ வகையில் காலங்காலமாக எத்தனையோ சிக்கல்களைச் சந்தித்துள்ளதை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும், இனவுணர்வும், மொழியுணர்வும் வேண்டும். அவை இல்லாத நாடு அழிவையே சந்திக்கும் இனத்திற்குள் ஏற்படும் ஆதிக்க வெறியும், பகையை உணர்வும் கூட இன்புற்று மொழிப்பற்றும் வழி வகுக்கும் என்பதை ‘வானிலா’ நாடகம் வழியாகத் தெளிவாக ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு இல்லாததால் தான் தமிழன் வீழ்ச்சியுற்றான் என்றும் பேசுகிறார் ஆசிரியர் இதனை.

**“தமிழனை பிறர் யாரும்**
**வீழ்த்த வில்லை - அவன்**
**தமையனே வீழ்த்துகின்றான்**
**தமிழனை பிறர் யாரும்**
**கெடுக்கவில்லை - அவன்**
**தனயனே கெடுத்து நிற்பான்**

www.tamilarangam.in

**உன்னுடன் பிறந்தவன் உனை எதிர்க்கின்றான்.**
**உன் பகைக்கே செருப்பாய் உழைக்கின்றான்,**
**தமிழா, அட தமிழா - நீ**
**உடன் வழி களிறென நடையிடும் உணர்வோடு”**

வரிகளால் அவரின் இன மன உணர்வை இது போன்ற பல அறியலாம்.

**முடிவுரை:**

வானிலா நாடகம் ஐந்து அம்சங்களைக் கொண்டும், தமிழ் நாடக இயலார் கூறும் முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்பதனை முறையே தொடக்கம், வளர்ச்சி அல்லது சிக்கல் உச்சநிலை வீழ்ச்சி, முடிவு என்னும் பகுப்புகளைக் கொண்டு அமைந்த பாங்கினையும், பாத்திரப் படைப்பின் வழியாக உணர்த்தப்படும் செய்திகளையும் நாடக நிகழ்வுகள் உணர்த்தும் செய்திகள், கரு, முடிவு போன்றவை யாவும் ஆய்ந்து கூறப்பட்டுள்ளது. அத்துடன் இந்நாடகத் தோற்றத்தின் நோக்கமும், தோற்றக்களமும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

www.tamilarangam.in